## இலங்கையின் நிதித் துறையின் உயர் நிறுவனத்தில் இணைந்துகொள்வதற்கு அரிய வாய்ப்பு



# இலங்கை மத்திய வங்கி

ஆர்வமும் கூட்டாகப் பணியாற்றும் எண்ணப்பாங்கும் கொண்ட இளையோரை

## வங்கித்தொழில் உதவியாளர்கள் (பயிலுநர்கள்)

ஆக அதன் அணியுடன் இணைந்துகொள்வதற்கு மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளுக்கு அழைப்புவிடுக்கின்றது

### 1. தகைமைப் பிரமாணம்

**1.1 வேண்டப்படும் கல்வித் தகைமைகள்:**

(அ) க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி (சிங்களம் அல்லது தமிழ்) உள்ளடங்கலாக குறைந்தது ஐந்து (05) ‘பீ’(B) சித்திகள் அத்துடன் ஆங்கில மொழியில் ‘சி’(C) சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

(ஆ) க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே தடவையில் முக்கிய பாடங்களில் (பொது ஆங்கிலம் நீங்கலாக) குறைந்தது மூன்று (03) ‘பீ’(B) சித்திபெற்றிருத்தல்.

**1.2 வயது:** 2025.05.23 அன்று உள்ளவாறு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 22 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கமைய, 2003.05.24 ஆம் திகதிக்கும் 2007.05.23 ஆம் திகதிக்கும் இடையில் பிறந்த திகதியைக் கொண்ட (சொல்லப்பட்ட திகதிகள் உள்ளடங்கலாக) விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெறுவர்.

### 2. தெரிவு நடைமுறை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையொன்று அத்துடன் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகள் ஊடாக மேற்கொள்ளப்படும். போட்டிப் பரீட்சையானது பின்வரும் வினாப்பத்திரங்களை உள்ளடக்கியிருக்கும்.

(i) பொது உளச்சார்பு (100 புள்ளிகள்) – 1 மணித்தியாலம்

(ii) எண்ணியல் தேர்ச்சிகள் (100 புள்ளிகள்) – 1 மணித்தியாலம்

(iii) கிரகித்தல் (100 புள்ளிகள்) – 1 மணித்தியாலம்

பரீட்சை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். இணையவழியில் விண்ணப்பப்படிவத்தில் தெரிவுசெய்யப்பட்ட மொழித்தேர்வு எச்சூழ்நிலையின் கீழும் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது.

### 3. விண்ணப்ப நடைமுறை

விண்ணப்பம், www.doenets.lk இன் "Our Services" மற்றும் "Online Applications - Recruitment Exams" இன் கீழ் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றது. விண்ணப்பங்கள் இணையவழியில் மாத்திரம் சமர்ப்பிக்கப்படக்கூடியதாகவிருக்கும். இணையவழி விண்ணப்ப வாயில் 2025.04.23அன்று மு.ப 9:00 மணியிலிருந்து 2025.05.23 அன்று பி.ப 9:00 வரை அணுகக்கூடியதாகவிருக்கும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்கின்ற போது பரீட்சைக்கு விண்ணப்பித்தல் பற்றி அறிவுறுத்தல்களை தரவிறக்கம் செய்யுமாறும் அத்தகைய அறிவுறுத்தல்களை அவதானத்துடன் பின்பற்றுவதை உறுதிசெய்யுமாறும் விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர். பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:** முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதில் தாமதமடைதலிருந்து ஏற்படுகின்ற ஏதேனும் பாதகமான தாக்கத்தை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

**3.1 பரீட்சை நிலையங்கள்:** இணையவழி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் போட்டிப் பரீட்சையை நடாத்தும். விண்ணப்பதாரியின் விருப்பத்தின் பேரில் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சை நிலையங்கள் அதன் பின்னர் எச்சூழ்நிலையின் கீழும் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது.

பரீட்சை அபேட்சகர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் அவர் தோற்றுவதற்காக மேற்பார்வையாளரின் திருப்திக்கு பரீட்சை மண்டபத்தில் அவரது அடையாளத்தை எண்பிப்பதற்கு வேண்டப்படுவார். இந்நோக்கத்திற்காக ஏதேனும் பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு

(iii) செல்லுபடியான இலங்கைச் சாரதி உரிமம்

tamilguru.lk

மேலும், தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்களது முகங்கள், காதுகளை மூடாது அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்கு நுழைய வேண்டும். சொல்லப்பட்ட விதத்தில் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு நிராகரிக்கின்ற அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டர். மேலும், அபேட்சகரை அடையாளம் காண்பதற்கு பரீட்சை மேற்பார்வையாளர்களை இயலச்செய்யும் விதத்தில் முகத்தை மற்றும் காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்திற்கு நுழைகின்ற நேரத்திலிருந்து பரீட்சை முடிவின் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை இருப்பதை அபேட்சகர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

**3.2 பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ.600 ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சைத் திணைக்களத்தின் இணையவழி விண்ணப்ப வாயில் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட பின்வரும் கொடுப்பனவு முறைகளூடாக மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) ஏதேனும் வங்கிக் கடனட்டைகள்

(ii) இணைய கொடுக்கல்வாங்கல் வசதியுடன்கூடிய ஏதேனும் வங்கிப் பற்று அட்டை

(iii) இலங்கை வங்கியின் இணையவழி வங்கிச் சேவை முறை

(iv) இலங்கை வங்கியின் ஏதேனும் கிளை

**குறிப்பு**

அ. மேற்குறித்த கொடுப்பனவு முறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள், பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

ஆ. கொடுப்பனவு பற்றிய ஏற்றுக்கொள்ளல், குறுஞ்செய்திச் சேவை அல்லது மின்னஞ்சல் ஒன்றின் வாயிலாக அறிவிக்கப்படும். மேலே குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் சரியான தொகை செலுத்தப்படவேண்டும் என்பதுடன் மிகையாக அல்லது குறைவாக பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கொடுப்பனவு முறைகள் ஊடாக பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துவது தொடர்பில் ஏற்படும் பிழைகளுக்கு பரீட்சைத் திணைக்களம் அல்லது இலங்கை மத்திய வங்கி பொறுப்புடையதாகவிராது.

இ. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படாது அல்லது ஏதேனும் வேறு பரீட்சைக்கு பரிமாற்றப்படாது.

**3.3 அனுமதி அட்டைகளை வழங்குதல்**

- பரீட்சை ஆணையாளர் நாயகம், இவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட வயது வரையறையினுள் வருகின்ற அத்துடன் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ள அத்துடன் விண்ணப்பங்களில் முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை இணையவழியில் உரியவாறு சமர்ப்பித்துள்ள அபேட்சகர்களுக்கு செய்தித்தாள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பங்களைச் சமர்பித்துள்ளவர்களுக்கு மாத்திரம் ஊகத்தின் அடிப்படையில் இணையவழியில் மாத்திரம் அனுமதி அட்டைகளை வழங்குவார்.
- அபேட்சகர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கியதன் உடனடியாகப் பின்னர் அது பற்றி அறிவித்தலொன்று செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்திலும் வெளியிடப்படும். அத்தகைய அறிவித்தலின் பின்னர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதிருப்பின் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனசார் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையிடமிருந்து அதுபற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ளுகின்ற போது பரீட்சையின் பெயர் மற்றும் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன சரியாகக் குறிப்பிடப்படவேண்டும். கொழும்பிற்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியொருவரின் விடயத்தில் அனுமதி அட்டைகளை வழங்கியதன் பின்னர் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு உடனடியாக அனுமதி அட்டையின் பிரதியினைப் பெற்றுக்கொள்வதற்கான தொலைநகல் இலக்கமொன்றினை வழங்கி கோரிக்கைக் கடிதமொன்றினை அனுப்புமாறு ஆலோசிக்கப்படுகின்றது.
- அபேட்சகர் ஒருவருக்கு அனுமதி அட்டையொன்றினை வழங்குவதற்கு பரீட்சையில் அமர்வதற்கு அல்லது பதவிக்கான தகைமையினை அவர் பூர்த்திசெய்துள்ளார் என்ற ஏற்றுக்கொள்ளல் ஒன்றாகக் கருதப்படல் ஆகாது.

**3.4 பரீட்சை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும்**

பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் மீது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மூலம் அபேட்சகர்கள் பிணிக்கப்பட்டுள்ளனர். இவ்விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மீறுகின்றவிடத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவர்.

### 4 பதவியுடன் தொடர்புடைய நியதிகளும் நிபந்தனைகளும்

- பயிற்சிக் காலம் இரு (02) ஆண்டுகள் ஆகும் என்பதுடன் இக்காலப்பகுதியின் போது அனைத்தையுமுள்ளடக்கிய நிலையான கொடுப்பனவாக மாதமொன்றிற்கு ரூ.65,000 வழங்கப்படும்.
- வங்கித்தொழில் உதவியாளர்கள் (பயிலுநர்கள்) இரு ஆண்டு பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கும் அதனைத்தொடர்ந்து ஒரு ஆண்டு தகுதிகாண் காலப்பகுதிக்கும் உட்பட்டு ஆட்சேர்ப்புத் திகதியிலிருந்து முகாமைத்துவ உதவியாளர்களாக முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு தரம் I (1) இற்கு ஈர்க்கும் திகதியிலிருந்து இணை முகாமைத்துவ உதவியாளர்களாக முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு தரம் I (1) இற்கு வங்கியின் நிரந்தப் பதவியணியில் உறுதிப்படுத்துவதற்குக் கருத்திற்கொள்ளப்படுவர்.
- முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு தரம் I (1) இல் உள்ள அலுவலர்கள் கவர்ச்சிகரமான சம்பளம், ஆண்டிற்கு இரண்டு மாத மொத்தச் சம்பளத்திற்குச் சமமான விசேடக் கொடுப்பனவு, சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம், மருத்துவ நன்மைகள் திட்டம், அலுவலர் கடன் வசதிகள், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் என்பனவற்றிற்கு உரித்துடையவராவர்.
- முகாமைத்துவத்தினால் அறிவுறுத்தப்படுகின்றவாறு பயிலுநர் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு வேண்டப்படுவர்.

### 5. ஏனைய நிபந்தனைகள்

- விண்ணப்பத்திகதியன்று தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவதுடன் தேவைப்படும் தகைமைகளை நிறைவுசெய்யாத ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்பு சென்முறையின் எந்வொரு கட்டத்திலும் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
- நேர்முகப் பரீட்சையின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அபேட்சகர்கள் இப்பதவிக்கு எக்காரணத்தின் கீழும் நியமிக்கப்படமாட்டர்.
- எந்த விதத்திலேனும் செல்வாக்கு தேடுவது அவர்களைத் தகுதியற்றதாக்கும்.
- நிரப்பப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைத்தல்/ இரத்துச் செய்தல் என்பவற்றைத் தீர்மானிக்கும் உரிமை இலங்கை மத்திய வங்கிக்குரியதாகும்.
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இவ்வறிவித்திலில் வெளியிடப்பட்ட உரைப்பகுதிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருந்தாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரைப்பகுதியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**பணிப்பாளர் – மனித வளங்கள் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி, இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி : 011-2477330 தொலைநகல் : 011-2477715